# இலங்கைக்கு ரஷ்ய ராணுவ உதவி கிடைக்கும்?

(கொழும்பு)
இலங்கை இராணுவ விவகாரங்களில் ரஷ்யாவின் ஒத்துழைப்பைக் கோரும் பட்சத்தில் அதுகுறித்து ரஷ்யா பரிசீலனை செய்யும் என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி என். வினேகிராடோவ் தெரிவித்துள்ளார்.
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 3 இதழ் 5
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15 — 02 — 1992

## புலிகளும் தெரிவுக்குழுவிடம் ஆலோசனை சமர்ப்பிக்கலாம்

(கொழும்பு)
நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் விடுதலைப் புலிகளும் தங்கள் யோசனைகளைச் சமர்ப்பிக்கலாமென மைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
புலிகள் தெரிவுக் குழுவிடம்
(4-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண உதவி வழங்கும் நாடுகள் வலியுறுத்து

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு சமாதான தீர்வு காணப்பட வேண்டுமென இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளன.
இத்தகவலை ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன்
(4ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# புலிகளின் அதிரடித் தாக்குதல்:

# 16 இராணுவத்தினர் உயிரிழப்பு

## 12 வீரவேங்கைகள் வீரச்சாவு

[மட்டுநகர்]

**மட்டக்களப்பு உன்னிச்சை பகுதியில் பாரிய ராணுவ வாகனங்களுடன் ரோந்துசென்ற ராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் பதினாறுக்கும் மேற்பட்ட ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் ராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டதுடன் பல நவீனரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இம்மோதலில் பன்னிரண்டு வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உன்னிச்சைப் பகுதியிலுள்ள இராணுவமுகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்று சனிக்கிழமை அதிகாலை 7 மணியளவில் பாரிய இராணுவ வாகனங்களில் இராணுவமுகாமுக்கு ரோந்து
(4-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்வுக்கு மகஜர் சமர்ப்பிப்பு

(கொழும்பு)
ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள "ஹெல உருமய" என அழைக்கப்படும் தேசிய பாரம்பரியம் என்னும் குழு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்
(4-ம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வெடித்து சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)
வவுனியாப் பகுதியிலுள்ள போகஸ்வெவ இராணுவ முகாமிலுள்ள காவலரண் ஒன்றில் நேற்று கைக்குண்டு ஒன்று வெடித்ததில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் மூவர் படுகாயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## ஹமில்டன் இழக்கு முகாம்களுக்கு விஜயம்

(கொழும்பு)
கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.
திருமலை, மொரவேவா, மட்டக்களப்பு, வெலிகந்த, மின்னேரியா, அம்பாறை, காரைதீவு ஆகிய முகாம்களுக்கு இவர் விஜயம் செய்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஈ)

## தமிழ் அகதிகள் விடயத்தில் அரசு உதாசீனம்

(திருமலை)
இந்தியாவிலிருந்து திருமலைக்கு வந்துள்ள தமிழ் அகதிகளுக்கு அரசு உறுதியளித்த சலுகைகள் எதையும் செய்து கொடுக்காது உதாசீனம் செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இந்தியாவிலிருந்து திருமலை வந்த அகதிகள் முகாம்களில் தங்கியிருந்து பின்பு தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் வரை பல நெருக்குதல்கட்டுறவுச் சங்கங்கள் மூலம்
(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்டத்தில் ஊரடங்கு

(கொழும்பு)
யாழ் குடாநாட்டில் எமிடு தீவுகள் நீங்கலாக ஏனைய இடங்களில் இன்றுகாலை ஆறு மணிமுதல் எதிர்வரும் பதினெட்டாம் திகதி காலை ஆறு
(4-ம் பக்கம் பார்க்க)

## சமஷ்டி தீர்வுபற்றி தெரிவுக்குழுவே முடிவு செய்யும்

(கொழும்பு)
இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு காணப்படவேண்டுமா என்பது குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவே முடிவு செய்யும் என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
[4ம் பக்கம் பார்க்க]

## தோட்டத் தொழிலாளர் கடத்தல் அதிகரிப்பு

(கொழும்பு)
மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் கடத்தப்படும் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இச்சம்பவங்கள் தொடர்பாக மலையகப் பகுதியில் பதற்றம் நிலவுவதாகவும், இனிவருங்காலங்களிலும் இவ்வாறான கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்
4ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டாமென வலியுறுத்து

(கொழும்பு)
அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டாமென்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அம்பாறை மாவட்ட தமிழ் மகா சபை மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.
அம்பாறை மாவட்டத்தில் இன்னும் நிலைமை சீரடையவில்லை. இங்கு இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. எனவே இங்கு உள்ளூராட்சித் தேர்
(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டாவுக்கு எதிரான பிரேரணை தோல்வி

(பண்டாரவளை)
பண்டாரவளை நகரசபையில் அமைச்சர் தொண்டமானுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொண்டுவரப்பட்ட பிரேரணை 3 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.
விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை
(4-ம் பக்கம் பார்க்க)

